Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.74/2026

**Depositions of PW- 4**

| Name | திரு.ரகுபதி | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | சீனிவாசன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of July 2026.

06.07.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மல்லி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 14.11.2025 அன்று 22.45 மணிக்கு மல்லி காவல்நிலைய சார்பு ஆய்வாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது சிவகாசி அரசு மருத்துவமனையிலிருந்த கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று விசாரித்ததில் காயம்பட்ட பிரவீன் என்ற பிரவீன்காந்த் சிவகாசி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுவிட்டு மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்ட விவரம் தெரிந்து மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையிலிருந்த வத்திராயிருப்பு மேல தெருவை சேர்ந்த பிரவீன் என்ற பிரவீன் காந்த் வயது 25 என்பவரை பார்த்து பின்னர் அவருக்கு உதவியாக இருந்த அவரது மனைவி முத்துச்செல்வி என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை 15.11.2025 அன்று 19.00 மணிக்கு பதிவு செய்து 20.00 மணிக்கு நிலையம் வந்தேன். புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.146/2025 பிரிவுகள்.281, 125(a) BNS பிரகாரம் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் வாதியின் புகார்வாக்குமூலத்தையும் இணைத்து

சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

பின்னர் 20.45 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுரேஷ்தங்கம், ஞானசேகர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பார்வை மகஜர் அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.பின்னர் சாட்சிகள் முத்துச்செல்வி, பிரவீன் என்ற பிரவீன்காந்த் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 29.11.2025 அன்று 10.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரி பிரதாப்சிங் என்பவரை கைது செய்து நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து சம்மன் கோரும் நாளில் திருவில்லிபுத்தூர் JM.II நீதிமன்றத்தில் ஆஜராக அறிவுறுத்தி தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். பின்னர் இவ்வழக்கில் தொடர்புடைய TN 84 P 5637 என்ற பதிவெண் கொண்ட Hero Splendor இருசக்கர வாகனத்தையும், TN 94 B 2651 என்ற பதிவெண் கொண்ட Maruti Suzuki Swiftdzire நாக்கு சக்கர வாகனத்தையும் திருவில்லிபுத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வு செய்ய வேண்டி தக்க வேண்டுகோள் கடிதத்துடன் ஆய்விற்கு அனுப்பிவைத்தேன்.

பின்னர் 16.12.2025 அன்று சாட்சி முத்துச்செல்வி என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் விபத்தில் தொடர்புடைய வாகனங்களை ஆய்வு செய்து ஆய்வறிக்கை அளித்த மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றேன். **மேற்படி TN 84 P 5637 என்ற பதிவெண் கொண்ட Hero Splendor இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. TN 94 B 2651 என்ற பதிவெண் கொண்ட Maruti Suzuki Swiftdzire நாக்கு சக்கர **வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட பிரவீன் என்ற பிரவீன்காந்த் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர் நவீன்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். **அசா.2ன் விபத்து பதிவேடு அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனையில்

அனுமதித்து சிகிச்சை அளித்த மருத்துவர் பாஸ்கர் அம்சத்ராஜா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டு அறிக்கை பெற்றேன். **அசா2 க்கு விருதுநகர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் மேல் சிகிச்சை அளித்த விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் அமித்கண்ணா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். **விருதுநகர் அரசு மருத்துவமனையில் அசா.2 க்கு வழங்கப்பட்ட காயச்சான்று அசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் காயம்பட்ட பிரவீன் என்ற பிரவீன் காந்த் என்பவருக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கிய தனியார் மருத்துவமனை மருத்துவர் திருமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **தனியார் மருத்துவமனையில் அசா-2 க்கு வழுனகப்பட்ட காயச்சான்று அசாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் காயச்சான்று பெற்றதன் தன்மைக்கேற்ப இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 281, 125(a) BNS லிருந்து பிரிவுகள்.281, 125(b) BNS ஆக மாறுதல் செய்து சட்ட மாறுதல் அறிக்கையை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே எனது விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள்.281, 125(b) BNS ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

முதல் தகவல் அறிக்கையில் இவ்வழக்கு சம்பவமானது திருவில்லிபுத்தூர் டு சிவகாசி பிரதான சாலையில் கார்த்திகைப்பட்டி பெல் கேட்டரிங் காலேஜ் அருகே நடந்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பெல் கேட்டரிங் காலேஜானது சாலையின் வடக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜரில் ரோட்டின் தெற்கு பக்கம் விபத்து நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி மேற்படி சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றார் என்றாலும் இவ்வழக்கில் காயம்பட்ட நபர் கிழக்கிலிந்து மேற்கு நோக்கி வந்தார் என்றாலும் சரிதான். இவ்வழக்கின் விபத்தானது மேற்படி காயம்பட்ட நபரால் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சிவகாசி மருத்துவமனையில் அசா.2 க்கு வழுனகப்பட்ட காயச்சான்றில் அவர் மது அருந்திவிட்டு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் விபத்து பதிவேட்டில் அசா.2 மதுபோதையில் இருந்ததாக

குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கருத்து கூற இயலாது என்று சான்று வழங்கியுள்ளார். அசா.2 மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டிவந்துள்ளார் என்றாலும் அதனை மறைத்து நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் சாட்சிகளை சரிவர புலன் விசாணை மேற்கொள்ளாமல் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் விபத்தானது அசா.2 ன் கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்ற ஆவணங்கள் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.